**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>**

முன்னிலை:- திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ம் நாள் வெள்ளிக்கிழமை

***<u>நி.வி.எண்.1/2021 in நி.வி.எண்.47-2020 in நி.ம.எண்.164/2015 in அ.வ.எண்.282/1989</u>***

வேணுகோபால் .....மனுதாரர்-தீர்ப்பாணை பெற்றவர்

/எதிர்/

நற்குணன் ..... எதிர்மனுதாரர்/2ம் தீர்ப்பு கடனாளி

இந்த இடைக்கால மனு என் முன்னர் கடந்த 2.2.2021ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.ராஜேந்திரன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.கே.ராமதாஸ், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

***<u>உ த்தரவு</u>***

இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறை சட்டம் 18 விதி 17-ன் கீழ் நி.வி. 47-2016ல் RW1 ஐ மீண்டும் அழைத்து (recall) செய்து விசாரணை செய்ய மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-</u>**

இந்த மனுவின் மனுதாரர் நி.வி.47-2016 மனுவில் எதிர்மனுதாரர் என்றும் தன்னை மீண்டும் அழைத்து recall செய்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டி இந்த மனுவை தாக்கல செய்துள்ளதாகவும், தனக்கு சென்ற 2 ஆண்டுகளுக்கு மேலாக நீர்த்தாரையில் அடைப்பு ஏற்பட்டு சிறுநீர் கழிக்க முடியாமல் அவதிப்பட்டு கொண்டிருந்ததாகவும் மேலும் தனக்கு வயது 76க்கு மேலாக தள்ளாமை வந்து விட்டது என்றும் அடிக்கடி ஜுரம் வந்து கொண்டிருக்கிறது என்றும் அதனால் தனக்கு மயக்கம் வருவதாலும் நடக்க முடியாமல் போய்விட்டது என்றும், எனவே தான் குறுக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தால் முன்னிலை ஆகாமல் போய்விட்டது என்றும் எனவே அவருடைய சாட்சியம் சென்ற 17.12.2020ல் முடியப்பட்டுவிட்டது என்றும் தான் அன்று வேண்டுமென்றோ

அலட்சியத்தின் பேரிலோ அன்றைய தினம் முன்னிலை ஆகாமல் இல்லை என்றும் எனவே இந்த வழக்கில் தன்னை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யும்படி ஆணையிட வேண்டியும் இல்லரிவிடில் தான் சென்னை உயர்நீதிமன்மற் வரையில் கட்சியாடி வெற்றி பெற்றும் அந்த தீர்ப்பாணையின் பலனை அனுபவிக்காமல் போய்விடும் என்றும் வீண் காலதாமதம் பணவிரயம் சொத்து இழப்பு உள்ளிட்ட பேரிழப்பு உண்டாகும் என்றும் எனவே நி.வி. 47-2016ல் RW1 ஐ மீண்டும் அழைத்து (recall) செய்து விசாரணை செய்ய மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. ***<u>எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த மெமோவின் சுருக்கம்:-</u>***

எதிர்மனுதாரர்கள் தங்களது எதிருரையில், இந்த எதிர்மனுதாரர் தரப்பு விசாரணையை முடித்து சுமார் 2 ஆண்டுகாலம் ஆகிறது என்றும் மேலும் இந்த மனுதாரர் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து 2 ஆண்டுகாலம் ஆகிறது அதிலிருந்து விசாரணைக்கு வராமல் இழுத்தடித்து வருகின்றார் என்றும், மேலும் இதற்கு முன் Recall Reopen மனு தாக்கல் செய்து அது EA. 74-2020 மற்றும் EA.75-2020 என நம்பராகி அனுமதிக்கப்பட்ட நிலையில் தற்போது மீண்டும் மனுதாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

6. இருதரப்பு வழக்கறிஞர்களின் வாத, பிரதிவாதங்களை கேட்டும், கோப்புகளை பரிசீலனை செய்ததில், இம்மனுவின் மனுதாரர் நி.வி.47-2016 மனுவில் எதிர்மனுதாரர் என்றும் இந்த வழக்கின் எதிர்மனுதாரர் தீர்ப்பாணை பெற்றவர் என்றும், நி.வி. 47-2016ல் RW1 ஐ மீண்டும் அழைத்து (recall) செய்து விசாரணை செய்ய வேண்டி மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் *"எதிர்மனுதாரர் தரப்பு விசாரணையை முடித்து சுமார் 2 ஆண்டுகாலம் ஆகிறது என்றும் மேலும் இந்த மனுதாரர் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்து 2 ஆண்டுகாலம் ஆகிறது என்றும், மேலும் இதற்கு முன் Recall Reopen மனு தாக்கல் செய்து அது EA. 74-2020 மற்றும் EA.75-2020 என நம்பராகி அனுமதிக்கப்பட்ட நிலையில் தற்போது மீண்டும் மனுதாக்கல்*

*செய்துள்ளார்"* ஆட்சேபனை தாக்கல் செய்திருந்தபோதும், மனுதாரர் தரப்பில் *"மனுதாரருக்கு சென்ற 2 ஆண்டுகளுக்கு மேலாக நீர்த்தாரையில் அடைப்பு ஏற்பட்டு சிறுநீர் கழிக்க முடியாமல் அவதிப்பட்டு கொண்டிருந்ததாகவும், மனுதாரருக்கு வயது 76க்கு மேலாக தள்ளாமை வந்து விட்டது, அடிக்கடி ஜுரம் வந்து கொண்டிருக்கிறது என்றும் அதனால் தனக்கு மயக்கம் வருவதாலும் நடக்க முடியாமல் போய்விட்டது என்றும், எனவே தான் குறுக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தால் முன்னிலை ஆகாமல் போய்விட்டது, இந்த வழக்கில் தன்னை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யும்படி ஆணையிட வேண்டியும் இல்லாவிடில் தான் சென்னை உயர்நீதிமன்றம் வரையில் கட்சியாடி வெற்றி பெற்றும் அந்த தீர்ப்பாணையின் பலனை அனுபவிக்காமல் போய்விடும் என்றும் வீண் காலதாமதம் பணவிரயம் சொத்து இழப்பு உள்ளிட்ட பேரிழப்பு உண்டாகும்"* என குறிப்பிட்டுள்ள காரணத்தை கொண்டும் அதனைப் பொறுத்து மனுதாரர் தரப்பை நிரூபிப்பதற்கு உரிய வாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்று நீதிமன்றம் கருதுகிறது. ஆனால் வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கையில், ஏற்கனவே இம்மனுதாரரால் *Recall Reopen மனு தாக்கல் செய்து அது EA. 74-2020 மற்றும் EA.75-2020 என நம்பராகி அது 28.10.2020 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. கடந்த 2 வருடங்களாக EA.47-2016 RW1 குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது என்பது தெரிய வருகிறது. எனவே* எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களுக்கு மனுதாரர் அவருக்கு இம்மனுவின் செலவுத்தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார்.

இறுதியாக, இம்மனுவின் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.1000ஐ 12.02.2021 தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும். தவறும் பட்சத்தில் இம்மனு தன்னிச்சையாக தள்ளுபடியாகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க 12.02.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 05.02.2021ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/- V. Geetha)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.